## பிரிக்பீல்ட்ஸ் தம்பிப்பிள்ளை சாலை பழுதால் பொது மக்கள் பாதிப்பு

## கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் நகர் திட்டப் பிரிவு

# உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்



பழுதடைந்த சாலை

ராமேஸ்வரி ராஜா

கோலாலம்பூர், ஜன. 6-

பிரிக்பீல்ட்ஸ் தபால் நிலையத்திற்கு பின்புறமுள்ள தம்பிப்பிள்ளை சாலை குண்டும் குழியுமாக இருக்கிறது. மழைக் காலங்களில் இங்கு நீர் தேக்கம் ஏற்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகிறது. சாலையை பயன்படுத்துவோர் இதனால் பாதிக்கப்படுகின்றனர் என பொது மக்களில் ஒருவரான சண்முகம் பழனிச் சாமி (48 வயது) தெரிவித்தார்.

இந்த சாலை சுற்றுப் பயணிகள் அதிகம் வந்துபோகும் இடங்களில் ஒன்றாகவும் முக்கிய நுழைவாயில் சாலைகளில் ஒன்றாகவும் திகழ்கிறது. இதன்வழி செல்லும் வாகனங்கள் பழுதடைந்து போகும் அதே வேளையில் பாதசாரிகளுக்கும் பாதுகாப்பின்மையை உண்டாக்குகிறது.

இது குறித்து கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் நகர் திட்டப் பிரிவுக்கு ஒரு மாதத்திற்கு முன்பாக நேரடியாகச் சென்று புகார் கடிதம் வழங்கப்பட்டது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என மக்கள் ஓசைக்கு வழங்கிய செய்தியில் அவர் குறிப்பிட்டார்.



சண்முகம் பழனிச்சாமி

பொது மக்களில் ஒருவர் புகார் கொடுத்தும் அதனை இன்னும் சீர்தூக்கி பார்க்காமல் இருப்பது ஏமாற்றமளிக்கிறது எனக்குறிப்பிட்ட சண்முகம், தம்பிப்பிள்ளை சாலையை பயன்படுத்துபவர்களின் நலன் கருதி நகர் திட்டப் பிரிவு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.